بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 16

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

22 ஷஃபான் 1441 ஹிஜ்ரி கமரி 16 ஷஹாதத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
16 ஏப்ரல் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَآ اِنَّكَ مَنۡ تُدۡخِلِ النَّارَ فَقَدۡ اَخۡزَيۡتَهٗ ‌ؕ وَمَا لِلظّٰلِمِيۡنَ مِنۡ اَنۡصَارٍ ۝١٩٣

எங்கள் இறைவா! நீ நெருப்பில் நுழையச் செய்தவரை நிச்சயமாக இழிவுபடுத்தி விட்டாய். மேலும் அநீதி இழைப்பவர்களுக்கு உதவி செய்பவர் எவரும் இல்லை. (3:193)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**அன்னாரிடம் எந்தளவிற்கு செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் இருந்தன என்றால் கைஸர் மற்றும் கிஸ்ராவிடம்கூட அவ்வளவு இருந்திருக்காது. அன்னார் அவை அனைத்தையும் ஒரு யாசகருக்கு வழங்கி விட்டார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் நல்லொழுக்கம்

அனைத்திலும் முழுமையான முன்மாதிரி மற்றும் உதாரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒன்றுபட்ட நல்லொழுக்கங்களை முழுமையாகக் கொண்டிருந்தார்கள். எனவேதான் அன்னாரின் தகுதி குறித்து கூறினான்: இன்னக ல அலா குலுகின் அழீம் (அல்கலம்:5). ஒரு நேரத்தில் அன்னார் விளக்கிக் கூறுவதில் ஒரு கூட்டத்தாருக்கு வரைபடமாக தோன்றி வியப்பிற்குள்ளாக்குகின்றார்கள். ஒரு நேரம் வருகின்றது, அம்பு மற்றும் வாளின் மைதானத்தில் முன்னேறி தைரியத்தைக் காட்டுகின்றார்கள். வள்ளல் தன்மைக்கு வந்துவிட்டால் தங்க மலையையே கொடுத்து விடுகின்றார்கள். மென்மையில் தமது தகுதியைக் காட்டியவாறு கட்டாயம் மரண தண்டனை வழங்க வேண்டியவரையும்கூட விட்டு விடுகின்றார்கள்.

இவ்வாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒப்பற்ற முழுமையான முன்மாதிரியாவார்கள். அதனை இறைவன் காண்பித்து விட்டான். அதன் உதாரணம் ஒரு பெரும் மகத்தான மரத்தைப் போன்றதாகும். அதன் நிழலில் அமர்ந்துகொண்டு மனிதன் அதன் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதன் பழம், அதன் மலர், அதன் பட்டை, அதன் இலையென ஒவ்வொரு பொருளும் பயனுள்ளதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மாபெரும் மரத்திற்கு ஒப்பானவர்களாவார்கள். அதன் நிழல் எப்படிப்பட்டது என்றால் கோடிக்கணக்கான படைப்பினங்கள் அதில் கோழியின் இறக்கையைப்போல் இளைப்பாறி அடைக்கலம் பெறுகின்றன. போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் இருப்பவரே அனைவரிலும் தைரியசாலியாகக் கருதப்பட்டார். ஏனென்றால் அன்னார் மிகவும் அபாயகரமான இடத்தில் இருந்து வந்தார்கள். சுப்ஹானல்லாஹ்! என்ன கம்பீரம்! உகதில் பாருங்கள், வாள்களின்மேல் வாள்கள் விழுகின்றன. எப்படிப்பட்ட மூர்க்கமான போர் நடந்து கொண்டிருந்து என்றால் சஹாபாக்களால் தாங்க முடியவில்லை. ஆனால் இந்த களத்தின் ஆண்மகன் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு சண்டையிடுகின்றார்கள். இதில் சஹாபாக்களின் தவறு இருக்கவில்லை. அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான்.

மாறாக அதில் இருந்த இரகசியம் என்னவென்றால் இதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தைரியத்தின் முன்மாதிரி காட்டப்படவேண்டி இருந்தது. ஒரு சந்தர்பத்தில் வாள்மேல் வாள் வீசப்பட்டுக் கொண்டிருந்து. அன்னார் நான் முஹம்மது ரசூலல்லாஹ் என நபித்துவ வாதம் செய்துகொண்டிருந்தார்கள். கூறுகின்றனர், அன்னாரின் நெஞ்சில் எழுபது காயங்கள் பட்டன. ஆனால் காயங்கள் சிறியதாக இருந்தன. இது மாபெரும் நல்லொழுக்கமாக இருந்தது.

ஒரு நேரம் வருகின்றது. அப்போது அன்னாரிடம் எந்தளவிற்கு செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் இருந்தன என்றால் கைஸர் மற்றும் கிஸ்ராவிடம்கூட அவ்வளவு இருந்திருக்காது. அன்னார் அவை அனைத்தையும் ஒரு யாசகருக்க வழங்கி விட்டார்கள். அன்னாரிடம் இல்லாதிருந்தால் எப்படி வழங்கியிருக்க முடியும்? ஆட்சியின் வண்ணம் இல்லாதிருந்தால் அன்னாரால் மரண தண்டனைக்குரிய மக்கா நிராகரிப்பாளரை (உயிர்) ஈடாகப்பெற தகுதியுடையவராக இருந்தும் மன்னிக்க முடிந்தது எவ்வாறு நிரூபிணமாகியிருக்கும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 114,115 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### காதியான் தாருல் அமானில் தேசிய இஜ்திமாக்களுக்கான தேதி அறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 16,17,18 அக்டோபர் 2020 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள்.

கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த இஜ்திமாக்கள் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கின்றது.

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எவர் ஒருவர் ஏதாவதொரு ஷஹீதை நடந்து செல்வதை பார்க்க விரும்பினால் அவர் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களை பார்க்கவும்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து நற்குறிப்பு**

**உலகத்தில் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் துஆவின் பக்கம் கவனம் செலுத்துமாறு ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 மார்ச் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **13 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபியின் பெயர் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் ஆகும். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் பனு தைம் பின் முர்ரா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரது தந்தையின் பெயர் உபைதுல்லாஹ் பின் உஸ்மான் ஆகும். தாயாரின் பெயர் சஃபா ஆகும். இவர்களது தாயார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அமாது ஹஸ்ரமியின் மகளும், ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமியின் சகோதரியும் ஆவார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் சுட்டுப் பெயர் அபூ முஹம்மது ஆகும்.

ஹஸ்ரத் தல்ஹா பின் ஹஸ்ரமி அவர்களின் தந்தையின் பெயர் அப்துல்லாஹ் பின் அப்பாது ஹஸ்ரமி ஆகும். ஹஸ்ரத் அலா ஹஸ்ரே மவ்த் என்ற இடத்தைச் சார்ந்தவர் ஆவார். மேலும் ஹர்ப் பின் உமைய்யாவின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை பெஹ்ரைனிற்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். மரணமடையும் வரை பெஹ்ரைனின் கண்காணிப்பாளராக இருந்தார்கள். அன்னாரது மரணம் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இவர்களது ஒரு சகோதரரான ஆமிர் பின் ஹஸ்ரமி பத்ர் போர் நாளன்று நிராகரிப்பின் நிலையிலேயே கொல்லப்பட்டார். இன்னொரு சகோரரான அம்ர் பின் ஹஸ்ரமி முஸ்லிம் கையினால் கொலை செய்யப்பட்ட முதல் இணை வைப்பவராக இருந்தார். இவரது செல்வம் தான் முதல் முதலாக பொருட் செல்வமாக இஸ்லாத்திற்கு கிடைத்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 160 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 71 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் 7 வது தலைமுறையில் முர்ரா பின் கஅப் அவர்களுடன் சேர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து விடுகின்றது. மேலும் 4 வது தலைமுறையில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களோடு இணைந்து விடுகிறது.

இவர்களது தந்தை உபைதுல்லாஹ் அவர்கள் இஸ்லாத்தின் காலகட்டத்தை அடையவில்லை. ஆனால் இவர்களது தாயார் நீண்ட வாழ்நாளைப் பெற்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டு சஹாபியா என்ற அந்தஸ்தைப் பெற்றார்கள். ஹிஜ்ரத்திற்கு முன்பாக இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

(குலாம் பாரி சைஃப் சாஹிப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே என்ற நூலிலிருந்து தொகுதி 2 பக்கம் 128)

ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்கள் பத்ர் போரில் பங்கு பெறவில்லை. ஆனால் பத்ர் போரில் கிடைத்த பொருட் செல்வத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு பங்கு வழங்கினார்கள்.

இவர்கள் பத்ர் போரில் கலந்து கொள்ளாததன் காரணத்தை பற்றி இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளின் படை சிரியாவிலிருந்து வருவது தொடர்பாக எண்ணினார்கள். எனவே தாம் வெளியேறுவதற்கு 10 நாட்களுக்கு முன்பாக ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களையும், சயீத் பின் ஸைது அவர்களையும் அக்குழுவைப் பற்றி தகவல் அறிந்து வரும்படி அனுப்பி வைத்தார்கள். இருவரும் வெளியேறி ஹவ்ரா என்ற இடத்தை சென்றடைந்தனர். குழுவைச் சார்ந்தவர்கள் இவ்விருவரையும் கடந்து செல்லும் வரை இவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள்.

ஹவ்ரா பஹீரா அஹ்மர் என்ற இடத்தில் இருக்கின்ற ஒரு தங்குமிடமாகும். இந்த வழிப்பாதையில்தான் சிரியா மற்றும் ஹிஜாஸ் குழுக்களைச் சார்ந்தவர்கள் கடந்து செல்வர். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சயீத் அவர்கள் திரும்பி வருவதற்கு முன்பாகவே இது பற்றிய செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை அழைத்து, குரைஷிகளை எதிர்கொள்ளும் எண்ணத்தில் வெளியேறினார்கள். ஆனால் குழுவைச் சார்ந்தவர்கள் சஹல் பகுதி வழியாக வேகமாக சென்று விட்டனர்.

இதைப் பற்றி இதற்கு முன்பும் எடுத்துக் கூறப்பட்டு விட்டது. மேலும் மக்காவைச் சார்ந்த நிராகரிப்பவர்களின் குழுவைச் சார்ந்தவர்கள் தம்மைத் தேடி வந்தவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இரவு பகலாக சென்று கொண்டிருந்தனர். ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இக்குழுவைப் பற்றி தகவல் கொடுப்பதற்காக வெளியேறினர். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக வெளியேறிய விஷயம் இந்த இருவருக்கும் தெரியாமல் இருந்தது. இவர்கள் மதீனா வந்தடைந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

குரைஷி படையுடன் பத்ர் மைதானத்தில் போர் செய்தார்கள். இவ்விருவரும் பெருமானார் (ஸல்) அவர்களை சந்திக்க மதீனாவிலிருந்து வெளியேறினர். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்திலிருந்து வெறியேறிய பிறகு துர்பான் என்ற இடத்தில் இவர்களை சந்தித்தார்கள். துர்பானும் மதீனாவிலிருந்து 19 மைல் தொலைவிலுள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். இங்கு சுவையான தண்ணீரைக் கொண்ட கிணறுகள் அதிகமாக இருக்கின்றது. பத்ர் போருக்காக சென்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்கு தங்கினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சயீத் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரிலிருந்து கிடைத்த பொருட் செல்வத்திலிருந்து இவர்களுக்கு பங்கு வழங்கினார்கள். இவ்விருவரும் பத்ர் போரில் பங்கு பெற்றவர்களில் இணைக்கப்பட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 162 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா.. தொகுதி 2 பக்கம் 123 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் உஹது போர் மற்றும் அடுத்து நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். சுலஹ் ஹுதைபிய்யாவிலும் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளிலேயே சுவர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்கிய 10 நபர்களில் இவர்களும் ஒருவர் ஆவார்கள். மேலும் அன்னார் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட 8 நபர்களில் ஒருவர் ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட 5 நபர்களில் இவர்கள் ஒருவர் ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் அவர்களால் நிறுவப்பட்ட 6 பேர் கொண்ட ஷூரா கமிட்டியில் இவர்களும் ஒரு உறுப்பினர் ஆவார்கள். மேலும் எவர்களது மரணத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருப்தி கொண்டிருந்தார்களோ அவர்களில் இவர்களும் ஒருவர் ஆவார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 317 தல்ஹா பின் உபைதுல்லாஹ் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 430 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

யஸீது பின் ரூமான் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் உஸ்மான் மற்றும் தல்ஹா பின் உபைதுல்லாஹ் ஆகிய இருவரும் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களுக்குப் பின்னால் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விருவருக்கு முன்பாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துக் கூறினார்கள். மேலும் இவ்விருவருக்கும் திருக்குர்ஆனைப் படித்துக் காட்டினார்கள். மேலும் இவர்களுக்கு இஸ்லாத்தின் உரிமைகள் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். மேலும் இவ்விருவருக்கும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து கிடைக்க இருக்கும் நற்கூலியைப் பற்றிய வாக்குறுதியை வழங்கினார்கள்.

எனவே இவ்விருவரும் அதாவது ஹஸ்ரத் உஸ்மான் மற்றும் ஹஸ்ரத் தல்ஹா ஆகியோர் ஈமான் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நான் இப்போதுதான் சிரியா நாட்டிலிருந்து வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

பிறகு திரும்பும்போது மஆன் என்ற இடத்தில் இந்த இடம் மூத்தா என்ற இடத்திற்கு முன்பாக இருக்கிறது. மூத்தா போர் சந்தர்ப்பத்தின்போது இந்த இடத்திற்கு வந்தபோது, இரண்டு லட்சம் ரோமானியர்கள் முஸ்லிம்களை எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கின்றனர் என்பது முஸ்லிம்களுக்கு தெரிய வந்தது. எனவே அவர்கள் இரண்டு நாட்கள் இங்கு தங்கினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் திரும்பியபோது மஆன் மற்றும் ஸர்கா என்ற இடத்திற்கு நடுவே சென்றடைந்தோம். எங்களது கூடாரம் அங்கு அமைக்கப்பட்டிருந்தது. நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தோம். அப்போது அறிவிப்பு செய்யக்கூடிய ஒருவர், தூங்கிக் கொண்டிருப்பவர்களே! விழித்தெழுங்கள். அஹ்மது மக்காவில் தோன்றி விட்டார் என்று அறிவிப்பு செய்தார். எனவே நாங்கள் மக்கா சென்றடைந்து அன்னார் தொடர்பாக செவியுற்றோம்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 40 உஸ்மான் பின் கஃப்ஃபான் – 2012 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 173 – 2014 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் கூறுகின்றார்கள்: சிரியா நாட்டிலுள்ள மிகவும் பிரசித்திப்பெற்ற ஒரு நகரமான பஸ்ராவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சச்சாவுடன் வணிக குழுவுடனான பயணத்தின்போது இந்த நகரத்தில் தங்கிருந்தார்கள். நான் பஸ்ராவின் கடை வீதிகளில் இருந்தபோது, ஒரு துறவி யூதர்களின் வணக்கஸ்தலத்தில், இக்குழுவைச் சார்ந்தவர்களில் ஹரமைச் சார்ந்தவர்கள் எவரும் இருக்கின்றாரா என்று கேட்கும்படி கூறினார். அதற்கு நான், ஆம் நான் இருக்கின்றேன் என்று கூறினேன். அதற்கு அவர், அஹ்மது தோன்றி விட்டாரா? என்று கேட்டார். அதற்கு தல்ஹா அவர்கள், அஹ்மது யார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிபின் மகன் ஆவார் என்று கூறினார்.

மேலும் அவர் கூறினார்: இந்த மாதத்தில்தான் அவர் தோன்றுவார். அவர் இறுதி நபியாக இருப்பார். அவர் தோன்ற இருக்கின்ற இடம் ஹரம் ஆகும். அவர் ஹிஜ்ரத் செய்யக்கூடிய இடத்தில் பேரீத்தம் பழ தோட்டங்களும், மலைப் பகுதியாகவும் இருக்கும். அவரை நீங்கள் விட்டு விடாதீர்கள்.

ஹஸ்ரத் தல்ஹா கூறுகின்றார்கள்: அவர் கூறிய அனைத்தும் எனது உள்ளத்தில் பதிந்து விட்டது. நான் வேகமாக சென்று மக்கா வந்து விட்டேன். மேலும் ஏதாவதொரு புதிய விஷயம் இருக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு மக்கள், ஆம்! முஹம்மது பின் அப்துல்லாஹ் அமீன் நபித்துவ வாதத்தை செய்துள்ளார்கள். அன்னாரை அமீன் என்று அழைத்து வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் சுட்டுப் பெயர் இப்னு அபீ கஹாஃபா ஆகும். அவர் இவரைப் பின்பற்றுகிறார் என்று கூறினர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு தங்கள் நம்பிக்கையை அநீதியுடன் கலக்காதவர்களுக்கே அனுமதி (விதிக்கப்பட்டு) உள்ளது. அவர்களே நேர்வழி பெற்றவர்களுமாவர். (6:83)

Faizal Hameed Ilahi, Tittacherry

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் வந்து, நீங்கள் இந்த சாஹிபை அதாவது பெருமானார் (ஸல்) அவர்களை பின்பற்றுகின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஆம் என்று கூறியவாறு, நீங்களும் அவர்களிடம் செல்லுங்கள். மேலும் அவர்களைப் பின்பற்றுங்கள். ஏனென்றால் அவர்கள் உண்மையின் பக்கம் அழைக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் அந்த துறவி கூறிய விஷயத்தை எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா அவர்களை அழைத்துக் கொண்டு வெளியேறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் துறவி கூறிய அனைத்து விஷயத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தார்கள். இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியுற்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 161 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

வரலாற்று நூலான தப்காத்துல் குப்ராவில் இந்த குறிப்பும் இடம் பெற்றுள்ளது. அதாவது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது நவ்ஃபல் பின் ஹுவேலத் பின் அத்விய்யா என்பவன் அன்னாரையும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களையும் ஒரே கயிற்றினால் கட்டினான். எனவேதான் அன்னாரையும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களையும் கரீனைன் அதாவது இரண்டு நண்பர்கள் என்றும் அழைக்கின்றார்கள். நவ்ஃபல் குரைஷிகளுக்கு மத்தியில் தமது கடுமைத்தனத்தினால் பிரபல்யமடைந்திருந்தார். ஹஸ்ரத் தல்ஹா அவர்களை கட்டிப் போட்டதில் அன்னாரது சகோதரரான உஸ்மான் பின் உபைதுல்லாஹ்வும் இருந்தார். இவர்கள் ஏன் கட்டப்பட்டனர் என்றால், இவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்கச் செல்லக்கூடாது. மேலும் இஸ்லாத்தை விட்டு விட்டு வெளியே வர வேண்டும்.

இமாம் பைஹக்கி எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! அத்விய்யாவின் தீங்குகளிலிருந்து அவர்களைப் காப்பாற்றுவாயாக.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே என்ற நூல், தொகுதி 2 பக்கம் 129,130)

ஹஸ்ரத் மஸ்வூது பின் கயாஸ் அறிவிக்கின்றார்கள்: ஒரு நாள் சஃபா மர்வா ஆகியவற்றிற்கிடையே நான் வலம் வந்து கொண்டிருந்தேன். அப்போது அதிகம் அதிகமான மக்கள் ஒரு இளைஞரை பின்தொடர்ந்து சென்று கொண்டிருப்பதை நான் கண்டேன். மேலும் அந்த இளைஞரது கையும், கழுத்தும் கட்டப்பட்டிருந்தது. நான் இவர் யார்? என்று கேட்டேன். அதற்கு மக்கள், தல்ஹா பின் உபைதுல்லாஹ் மார்க்கமற்றவனாக ஆகி விட்டான் என்று கூறினர். மேலும் தல்ஹா அவர்களது தாயார் சஃபாவும் அவர்களுக்குப் பின்னால் கடுங்கோபத்துடன் அவர்களை ஏசிப்பேசியவாறு பின்னால் சென்று கொண்டிருந்தார்கள்.

(அத்தாரீகுஸ் சகீர் இமாம் புகாரி தொகுதி 1 பக்கம் 113)

அப்துல்லாஹ் பின் சஅது தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தவாறு ஹிஜாஸிற்கு அருகில் இருக்கின்ற ஹரார் என்ற பள்ளத்தாக்கு வழியாக சென்றார்கள். ஹர்ரார் மதீனாவில் இருக்கின்ற பள்ளத்தாக்கில் ஒன்றாகும் என்றும் கூறப்படுகிறது. அப்போது காலைப்பொழுதில் சிரியாவிலிருந்து குழுவுடன் வந்திருந்த ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களை சந்தித்தார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கும் சிரியா நாட்டின் ஆடைகளை அணிவித்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களிடம், மதீனாவைச் சார்ந்தவர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவலை அன்னாரிடம் தெரிவித்தார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மிக வேகமாக சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் மக்கா சென்று விட்டார்கள். பிறகு அவர்கள் தமது பணிகளை முடித்து விட்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் வீட்டிலுள்ளவர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு மதீனா வந்தடைந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 161 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 400 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்காவில் ஹஸ்ரத் தல்ஹா அவர்களும் ஹஸ்ரத் சுபைர் அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பாக இவர்கள் இருவருக்குமிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். மேலும் முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்ற பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா அவர்களுக்கும், ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களுக்குமிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

இன்னொரு கூற்றிற்கேற்ப ஓர் அறிவிப்பு இவ்வாறும் வந்துள்ளது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சயீது பின் ஸைது ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இன்னொரு மூன்றாவது அறிவிப்பு இவ்வாறும் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் அபீ பின் கஅப் ஆகியோருக்கிடையே பெருமானார் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் மதீனா வந்ததும் ஹஸ்ரத் அஸது பின் ஸிராரா அவர்களது வீட்டில் தங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 162 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 85 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் சில பொருள் தியாகத்தின் விளைவாக பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாரை வள்ளல் தன்மை கொண்டவர் (வாரி வாரி வழங்குபவர்) என்று அழைத்தார்கள். ஸீ கர்த் போரின் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நீரூற்றை கடந்து சென்றார்கள். அப்போது

**திருக்குர்ஆனிலிருந்து...**

பார்வைகளால் அவனை அடைய முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகிறான். அவன் நுட்பமானவனும், யாவற்றையும் அறிந்தவனுமாவான். (6:104)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

பெருமானார் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக கேட்டறிந்தார்கள். அப்போது இந்த நீரூற்றின் பெயர் பைஸான் ஆகும். இதிலுள்ள தண்ணிர் உப்பாக இருக்கின்றது என்று அன்னாரிடம் கூறப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இதன் பெயர் நுஃமான் ஆகும். இது சுவையானதும், தூய்மையானதும் ஆகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் இதனை விலைக்கு வாங்கி அர்ப்பணித்து விட்டார்கள். இதன் தண்ணீர் சுவையாக மாறியது. ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து இந்த விஷயத்தைக் கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தல்ஹாவே நீர் மிகப்பெரும் வள்ளல் தன்மை கொண்டவர் ஆவீர்.

எனவே தல்ஹா அவர்கள் இந்த பெயரைக் கொண்டு அழைக்கப்பட்டார்கள்.

மூஸா பின் தல்ஹா தனது தந்தையான தல்ஹா அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் நாளன்று ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் பெயரை தல்ஹத்துல் கைர் என்று வைத்தார்கள். தபூக் போர் மற்றும் ஸீ கர்த் போரின்போதும் அன்னாரது பெயரை தல்ஹத்துல் ஃபயாஸ் என்று வைத்தார்கள். மேலும் ஹுனைன் போரின் போது தல்ஹத்துல் ஜூத் என்று வைத்தார்கள். இதன் பொருள் வள்ளத் தன்மை கொண்டவர். வாரி வாரி வழங்குபவர் என்பதாகும்.

(அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 3 பக்கம் 478 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 85 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சாயிப் பின் யஸீது அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. நான் பயணத்திலும் இதர நாட்களிலும் ஹஸ்ரத் தல்ஹா அவர்களுடன் இருந்துள்ளேன். தல்ஹா அவர்களைப் போன்று பணத்தையும், ஆடைகளையும், உணவையும் வாரி வாரி வழங்கிய எவரையும் நான் கண்டதில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 167 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல) அவர்கள் உஹது நாளன்று தமது சஹாபாக்களின் ஒரு ஜமாஅத்திடம் மரணத்திற்கான பைஅத்தை வாங்கினார்கள். வெளிப்படையாக முஸ்லிம்கள் அங்கும் இங்கும் சிதறுண்டனர். ஆனால் இவர்கள் நிலைத்து நின்றனர். மேலும் தமது உயிரை பொருட்படுத்தாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தற்காத்துக் கொண்டிருந்தனர். எதுவரை என்றால் அவர்களில் சிலர் ஷஹீதனார்கள். பைஅத் செய்தவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ருத் சஅத், ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் மற்றும் ஹஸ்ரத் அபூதஜானா ஆகியோர் அடங்குவர்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 3 பக்கம் 431 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் உஹது நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடன் நிலைத்து நின்ற, மரணத்திற்கான பைஅத் செய்த நபர்களில் இவர்களும் ஒருவர் ஆவார்கள். மாலிக் பின் ஸுஹைர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அம்பு எய்தபோது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்தை தமது கைகளால் பாதுகாத்தார்கள். அம்பு அன்னாரது சிறிய விரலின் மீது பட்டது. எனவே அன்னாரது விரல் இழப்பிற்குள்ளாகியது. முதல் முறையாக அம்பு பட்டபோது அந்த வேதனையின் காரணமாக ஸ் என்ற வார்த்தை வெளிவந்தது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், அவர் பிஸ்மில்லாஹ் என்று கூறியிருந்தால் மக்கள் அவரைப் சுவர்க்கத்தில் நுழைவதை பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது. அதாவது உஹது போரின் நாளில் ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் தலையில் ஒரு இணை வைப்பவன் இரண்டு முறை காயத்தை ஏற்படுத்தினான். எனவே அதிலிருந்து அதிகமான இரத்தம் வெளியேறியது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 162,163 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத்துல் ஹல்பிய்யாவில் இந்த சம்பவம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இவ்வாறு வந்துள்ளது. கைஸ் பின் அபூ ஹாஸ்மா கூறுகின்றார்கள்: நான் உஹது நாளன்று ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களின் கையைப் பார்த்தேன். அவர்களது கை பெருமானார் (ஸல்) அவர்களை அம்பின் தாக்குதலிலிருந்து காப்பாற்றியவாறு செயலிழந்திருந்தது.

இன்னொரு கூற்றும் உள்ளது. அதாவது அதில் அம்பு பட்டது. அதனால் அன்னாருக்கு எந்த அளவுக்கு இரத்தம் வெளியேறியது என்றால் பலவீனத்தின் காரணமாக அன்னார் மயக்கமடைந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவர்களின் மீது தண்ணீர் துளியை தெளித்தபோது அன்னாருக்கு நினைவு திரும்பியது. நினைவு திரும்பியதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், அவர்கள் நலமாக இருக்கின்றார்கள். அவர்கள்தான் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறினார்கள்: அல்ஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒவ்வொரு துன்பமும் சிறியதே ஆகும்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 324 கஸ்வா உஹது – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த போர் சம்பவம் தொடர்பாக இன்னொரு அறிவிப்பில் ஒரு வரலாற்று நூலில் இவ்வாறு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது நாளன்று இரண்டு கவசங்களை அணிந்திருந்தார்கள். அன்னார் குன்றின் மீது ஏற விரும்பினார்கள். ஆனால் கவசங்களின் காரணமாகவும், தலையிலும், முகத்திலும் இரத்தம் வெளிவந்து காயங்கள் ஏற்பட்டிருந்ததாலும் பலவீனத்தின்

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகள் வந்துள்ளன. எனவே எவர் அவற்றைக் (கவனித்துப்) பார்க்கிறாரோ அது அவருக்கே நன்று. எவர் கண்ணை மூடிக்கொள்கிறாரோ அது அவருக்கே கேடு. நான் உங்களைக் காப்பாற்றுபவனல்லன். (6:105)

A.Basheer Ahmad, Melapalayam

காரணமாக குன்றின் மீது பெருமானார் (ஸல்) அவர்களால் ஏற முடியவில்லை. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா அவர்களை கீழே அமர்த்தினார்கள். மேலும் அவர்கள் மீது காலை வைத்து குன்றின் மீது ஏறினார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன். அதாவது தல்ஹா தன்மீது சுவர்க்கத்தை கடமையாக்கி விட்டார்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 321 கஸ்வா உஹது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 321 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பு இவ்வாறு வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் ஒரு கால் ஊனமாக இருந்தது. அதன் காரணமாக அவர்களால் நேராக நடக்க முடியாமல் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களை, தல்ஹா அவர்கள் தூக்கியபோது அவர்கள் மிகவும் முயற்சி செய்து, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த கஷ்டமும் ஏற்படக்கூடாது என்பதற்காக தமது பாதங்களை சரியாக வைத்தார்கள். இதன் காரணமாக நிரந்தரமாக அவர்களது ஊனம் சரியானது.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 322 கஸ்வா உஹது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் இரண்டு மகள்களான ஆயிஷா மற்றும் உம்மே இஸ்ஹாக் ஆகியோர் கூறுகின்றார்கள்: உஹது நாளன்று எங்களது தந்தைக்கு 24 காயங்கள் ஏற்பட்டிருந்தது. இதில் ஒரு காயம் தலையில் ஏற்பட்டிருந்தது. மேலும் கால்களிலுள்ள நரம்பு வெட்டப்பட்டிருந்தது. விரல் செயலற்று போனது. மேலும் உடலில் ஏற்பட்டிருந்த மற்ற காயங்களினால் உடல் மறத்துப்போயிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இரண்டு பற்கள் உடைந்திருந்தன. அன்னாரது முகத்திலும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அன்னாருக்கும் மயக்க நிலை இருந்தது.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை தமது முதுகில் வைத்துக் கொண்டு, எந்த இணை வைப்பவர் எதிரில் வந்தாலும் அவருடன் சண்டையிட்டவாறு சென்றார்கள். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்களை இரண்டு மலைகளுக்கு இடையே இருக்கின்ற வழிப்பாதை வழியாக அன்னாரை அழைத்துச் சென்றார்கள். தப்காத்துல் குபுராவில் இந்த ஆதாரம் உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 163 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போர் நாளன்று காலித் பின் வலீத் அவர்கள் முஸ்லிம்கள் மீது திடீரென தாக்குதல் தொடுத்தார்கள். மேலும் முஸ்லிம்களுக்கு கவலை ஏற்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை படம் பிடித்தவாறு பல்வேறு அறிவிப்புகளிலிருந்து விளக்கத்தை கூறியுள்ளார்கள். அது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் நிலைத்து நின்ற மற்றும் தியாகத்தின் தரத்தின் ஒரு வியக்கத்தக்க காட்சியை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: சில சஹாபாக்கள் ஓடிச் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒன்று கூடினர். அவர்களின் எண்ணிக்கை அதிகப்படியாக 30 இருக்கும். நிராகரிப்பவர்கள் மிகவும் வலுவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்று கொண்டிருந்த அந்த இடத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். ஒன்றன் பின் ஒன்றாக சஹாபாக்கள் அன்னாருக்கு பாதுகாப்பு வழங்கியவாறு கொல்லப்பட்டார்கள். அதுமட்டுமின்றி அம்பு எய்யும் திறமை பெற்றவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி அம்பு எய்தனர்.

எதிரிகள் அம்பு எய்து கொண்டிருப்பதைக் கண்ட ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் அந்த நேரத்தில் மக்கத்து முஹாஜிரீன்களுடன் இணைந்து குரைஷிகளுக்கு மத்தியில் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்தை குறி வைத்து எதிரிகள் அம்பு எய்கின்றனர் என்பதைப் பார்த்த ஹஸ்ரத் தல்ஹா அவர்கள், தமது கையை பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன்னால் வைத்தார்கள். அம்பு தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. தல்ஹா அவர்களின் கையின் மீது தொடர்ந்து பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் பற்றுணர்வுமிக்க இந்த சஹாபி தனது கையை அசைக்கவே இல்லை. இவ்வாறு அவர்களது கையில் அம்பு பட்டுக் கொண்டே இருந்ததினால் அவர்களது கையில் கடுமையான காயங்கள் ஏற்பட்டதனால் கை செயலிழந்து போனது. இப்போது ஒரேயொரு கை மட்டுமே எஞ்சியிருந்தது.

பல வருடங்களுக்குப் பிறகு இஸ்லாத்தின் நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் முஸ்லிம்களிடம் ஏற்பட்ட பிரச்சனைக்குரிய சம்பவத்தின்போது ஒரு எதிரி தல்ஹா அவர்களைப் பார்த்து, கை வெட்டப்பட்டவர் என்று கூறினார். இதற்கு இன்னொரு சஹாபி, ஆம் அவர் கை வெட்டப்பட்டவர் தான். ஆனால் அது எத்தகைய அருளுக்குரிய வெட்டப்பட்ட கையாக இருக்கின்றது. உமக்கு என்ன தெரியும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை பாதுகாத்தவாறு தல்ஹா அவர்களின் இந்த கை வெட்டப்பட்டது என்று கூறினார்கள்.

உஹது போருக்குப் பிறகு ஒரு நபர் ஹஸ்ரத் தல்ஹா அவர்களிடம், அம்பு உங்கள் கை மீது விழும்போது அதனால் உங்களுக்கு வலி ஏற்படவில்லையா? உங்களது வாயிலிருந்து சீ என்ற வார்த்தை கூட வரவில்லையா? என்று கேட்டார். அதற்கு தல்ஹா அவர்கள், வலியும் இருந்தது. சீ என்ற வார்த்தையும் வெளிவர விரும்பியது. ஆனால் நான் சீ என்று கூட சொல்லவில்லை. ஏனென்றால் நான் சீ என்று சொல்லும்போது எனது கை அசைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் அம்பு பட்டுவிடக்கூடாது என்பதற்காக நான் சீ என்று கூட சொல்லவில்லை.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 250)

ஹம்ரவுல் அஸது போரில் பின்தொடர்ந்து சென்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களை சந்தித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா அவர்களிடம், தல்ஹாவே உமது ஆயுதங்கள் எங்கே என்று கேட்டார்கள். அதற்கு தல்ஹா அவர்கள், அருகில் தான் இருக்கின்றது

**திருக்குர்ஆனிலிருந்து...**

வேண்டுமென்றே அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்து கூறுபவனை விடவும், தனக்கு வஹி அருளப்படாதிருக்க எனக்கு வஹி அருளப்பட்டது என்று கூறுபவனை விடவும் இன்னும் அல்லாஹ் இறக்கியது போன்றே நிச்சயமாக நானும் (வேதவசனத்தை) இறக்குவேன் என்று கூறுபவனைவிடவும் மிகவும் கொடியவன் எவன்? (6:94)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

என்று கூறியவாறு விரைவாக சென்று தமது ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அந்த சமயத்தில் அன்னாரது நெஞ்சுப் பகுதியில் மட்டும் 9 காயங்கள் இருந்தன. அவர்களது உடலில் மொத்தம் 70 ஐ விட அதிகமான காயங்கள் ஏற்பட்டிருந்தன.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனக்கு ஏற்பட்டுள்ள காயங்களை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால் மிகுந்த கவலையில் இருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்து, நீங்கள் எதிரிகளை எங்கே கண்டீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான், தாழ்ந்த பகுதியில் என்று கூறினேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், எனது எண்ணமும் இதுவாகவே இருந்தது. குரைஷிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு நம்முடன் இனி ஒருபோதும் இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்காது. அல்லாஹ் நமது கைகளின் மூலமாக மக்காவை வெற்றி பெறச் செய்வான் என்று கூறினார்கள்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 350,351 கஸ்வா உஹது – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, சில நயவஞ்சகர்கள் சுவைலம் என்ற யூதனுடைய வீட்டில் ஒன்றுகூடி இருக்கின்றார்கள் என்ற தகவல் கிடைத்தது. ஜாஸூம் என்ற பகுதிக்கு அருகில் அவனது வீடு இருந்தது. அங்கு அபூ ஹேஷம் பின் தைஹானின் கிணறு இருந்தது. அதன் தண்ணீர் மிகவும் நன்றாக இருக்கும். பெருமானார் (ஸல்) அவர்கள் அதன் தண்ணீரை அருந்தி இருக்கின்றார்கள்.

எவ்வாறிருப்பினும், அவனது வீட்டில் அவர்கள் கூடினர். மேலும் அந்த நயவஞ்சகர்கள் தபூக் போரில் கலந்து பெருமானார் (ஸல்) அவர்களுடன் இணைந்து கலந்து கொள்வதற்காக சென்ற மக்களை தடுத்து நிறுத்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா அவர்களுடன் மேலும் சில சஹாபாக்களை அவன் பக்கம் அனுப்பினார்கள். மேலும் அவர்களிடம், சுவைலமின் வீட்டிற்கு நெருப்பை மூட்டுமாறும் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் அவ்வாறே செய்தார்கள். ஸஹ்ஹாக் பின் கலீஃபா வீட்டின் பின்புறமாக வெளியேற முயன்றார். அப்போது அவரது கால் உடைந்து விட்டது. மேலும் அவருடன் இருந்த மற்ற நபர்கள் ஓடிவிட்டனர்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா லாபின் ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 517 கஸ்வா தபூக் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 86 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுகின்றார்கள்: எனது இரண்டு காதுகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டது. அதாவது ஹஸ்ரத் தல்ஹா மற்றும் சுபைர் ஆகிய இருவரும் சுவர்க்கத்தில் எனது அருகில் இருப்பார்கள்.

தபூக் போரில் பின்தங்கிவிட்டவர்களில் ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் அவர்களும் ஒருவர் ஆவார்கள். அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். 40 நாட்களுக்குப் பிறகு அல்லாஹ் அவர்களின் தவ்பாவை ஏற்றுக் கொண்டான். மன்னிப்பிற்கான அறிவிப்பு செய்யப்பட்டது. பள்ளிவாசலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக இவர்கள் வந்தபோது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் முன்வந்து ஹஸ்ரத் கஅப் அவர்களிடம் கை குலுக்கினார்கள். மேலும் அவர்களுக்கு வாழ்த்துக்களை கூறினார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்களைத் தவிர வேறு எவரும் அந்த சபையிலிருந்து எழுந்து வரவில்லை.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் இந்த பரிவை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

(குலாம் பாரி ஸைஃப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே என்ற நூல், தொகுதி 2 பக்கம் 145)

ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் கூறுகின்றார்கள்: ஒன்பது நபர்கள் தொடர்பாக அவர்கள் சுவர்க்கவாசிகள் என்று நான் சாட்சி கூறுகின்றேன். மேலும் பத்தாவது நபரைப் பற்றி நான் சாட்சி பகர்ந்தாலும் நான் குற்றவாளியாக ஆக மாட்டேன். அப்போது இது எவ்வாறு சாத்தியமாகும் என்று கூறப்பட்டது. அதற்கு அவர்கள், நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹிரா குகையில் இருந்தோம். அப்போது அது குலுங்கியது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், ஹிராவே! நில். நிச்சயமாக உம்மீது ஒரு நபி அல்லது சித்தீக் அல்லது ஷஹீதைத் தவிர வேறு எவரும் அமரவில்லை.

அவர்கள் யார் என்று சயீது அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ர், உமர், உஸ்மான், அலி, தல்ஹா, சுபைர், சஅத் மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோர் ஆவர்.

இவர்கள் ஒன்பது நபர்கள் ஆவர். பத்தாவது நபர் யார் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் சிறிது நேரம் தயங்கினார்கள். பிறகு அது நான்தான் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் சயீது பின் ஸைது ஆவார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3757)

ஹஸ்ரத் சயீது பின் ஜுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் சுபைர், ஹஸ்ரத் சஅத், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான், ஹஸ்ரத் சயீது பின் ஸைது ஆகியோரின் எந்தஸ்து எந்த அளவுக்கு இருக்கின்தென்றால், போர் களத்தில் இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்றவாறு சண்டையிடுவார்கள். மேலும் தொழுகையில் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நிற்பார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 478 சயீது பின் ஸைது – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒருவர் ஏதாவதொரு ஷஹீதை நடந்து செல்வதைப் போன்று காண விரும்பினால் பிறகு அவர் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களை கண்டு கொள்ளட்டும்.

ஹஸ்ரத் மூஸா பின் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் ஈஸா பின் தல்ஹா தனது தந்தையான ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்)

## திருக்குர்ஆனிலிருந்து...

உம்முடைய இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை நீர் பின்பற்றி நடப்பீராக; அவனன்றி (வேறு) எதுவும் வணங்கத்தக்கதல்ல. மேலும் இணை வைப்பவர்களை விட்டு நீர் விலகிக் கொள்வீராக. (6:107)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அவர்களின் சஹாபாக்கள் கூறி வந்தார்கள். அதாவது ஒரு காட்டரபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், மன் கஸா நஹ்பஹு அதாவது அவர்கள் தங்களது எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர் என்று யாரைப் பற்றி கூறப்பட்டுள்ளது? என்று கேட்டார். அந்த காட்டரபியின் கேள்விக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த பதிலும் அளிக்கவில்லை. மீண்டும் அவர் கேட்டார். ஆனால் அன்னார் எந்த பதிலும் அளிக்கவில்லை. மீண்டும் அவர் கேட்டார். மூன்றாவது முறையும் அன்னார் பதிலளிக்கவில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நான் பள்ளிவாசலின் கதவுக்கு முன்னால் வந்தேன். அப்போது நான் பச்சை நிற ஆடையை அணிந்திருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்களை என்னைக் கண்டபோது அதாவது ஹஸ்ரத் தல்ஹா அவர்களைக் கண்டபோது, மன் கஸா நஹ்பஹு அதாவது அவர்கள் தங்களது எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர் என்று யாரைப் பற்றி கூறப்பட்டுள்ளது? என்று கேள்வி கேட்ட அந்த நபர் எங்கே என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த காட்டரபி, யா ரஸூலல்லாஹ்! நான் இருக்கின்றேன் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் என் பக்கம் சைகை செய்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்: என் பக்கம் சைகை செய்தார்கள். பாருங்கள். இவர்தான் மன் கஸா நஹ்பஹு அதாவது தங்கள் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர் என்பதற்கு உரிமை படைத்தவர் ஆவார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 86 தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துர் ரஹ்மான் பின் உஸ்மான் கூறுகின்றார்கள்: ஒரு முறை நாங்கள் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களுடன் இருந்தோம். நாங்கள் இஹ்ராம் அணிந்திருந்தோம். ஒரு நபர் எங்களிடம் அன்பளிப்பாக ஒரு பறவையை கொண்டு வந்தார். அப்போது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். எங்களில் சிலர் அதை உண்டோம். மேலும் சிலர் அதை உண்பதிலிருந்து விலகி இருந்தனர். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கண் விழித்த பிறகு எவர்கள் அதை உண்டார்களோ அவர்களிடம் தொடர்பை மேலும் அதிகரித்தார்கள். மேலும் கூறினார்கள்: நாங்களும் இஹ்ராம் சந்தர்ப்பத்தில் மற்றொருவரின் வேட்டை உணவை பெருமானார் (ஸல்) அவர்கள் இருக்கும்போது சாப்பிட்டிருக்கின்றோம்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 7, முஸ்னத் அபூ முஹம்மது தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 2001 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் உமர் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அஸ்லம் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களின் உடலில் இரண்டு ஆடைகளைக் கண்டார்கள். அது சிவந்த செம்மண்ணால் நிறமாக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்போது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் இஹ்ராமில் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், தல்ஹா அவர்களிடம், தல்ஹாவே! இந்த இரண்டு ஆடைகளின் நிலை என்ன? அதாவது இந்த ஆடைகள் ஏன் நிறமாக்கப்பட்டிருக்கின்றது? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அமீருல் முஃமினின் அவர்களே! நான் மண்ணைக் கொண்டு இதனை நிறமாக்கியுள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், சஹாபாக்களின் கூட்டத்தினரே! நீங்கள் இமாமாக இருக்கின்றீர்கள். மக்கள் உங்களை பின்பற்றுகிறார்கள். ஒரு அறிவீனர் ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் உடலில் இருக்கின்ற ஆடைகளைப் பார்த்து தல்ஹா இஹ்ராமின் நிலையில் வெள்ளை ஆடைகளை அணிவதற்கு பகரமாக வண்ணம் பூசப்பட்ட ஆடைகளை அணிந்துள்ளதாக கூறி ஆட்சேபனை செய்வார். ஆனால் அவரோ நீங்கள் எந்த நிறத்தைக் கொண்டு வண்ணம் பூசினாலும் அவர் அவ்வாறே ஆட்சேபனை செய்வார்.

இன்னொரு அறிவிப்பில் அதிகப்படியாக இந்த சொற்கள் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: இஹ்ராம் அணியக்கூடியவருக்கு மிகவும் சிறந்த ஆடை வெள்ளை நிறத்தினாலான ஆடையாகும். எனவே மக்களை சந்தேகத்தில் ஆழ்த்த வேண்டாம்.

ஹஸ்ரத் ஹஸன் அவர்கள் தரப்பிலிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்கள் ஒரு நிலத்தை ஹஸ்ரத் உஸ்மான் பின் கஃப்பான் அவர்களிடம் 7 லட்சம் திர்ஹமிற்கு விற்று விட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் இந்த தொகையை அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் இந்த தொகையை தனது வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்தபோது அவர்கள் கூறினார்கள்:

ஒருவரிடம் இரவு முழுவதும் இவ்வளவு பெரிய தொகை இருந்தால் பிறகு அவர் தொடர்பாக இறைவன் தரப்பிலிருந்து எந்த கட்டளை இறங்கும் என்பது யாருக்கு தெரியும்? வாழ்க்கை மற்றும் மரணம் தொடர்பாக எதுவும் தெரியாது. எனவே ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் மதீனாவின் வீதிகளில் இரவு முழுவதும் இந்த தொகையை தேவையுடையவர்களுக்கு பங்கிட்டு கொடுப்பதற்காக சுற்றித் திரிந்தார்கள். எதுவரை என்றால் காலை விடிந்தது. அப்போது இந்த தொகையில் ஒரு திர்ஹம் கூட அவர்களிடம் எஞ்சியிருக்கவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 164,165 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு ஜரீர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்தபோது ஹஸ்ரத் தல்ஹா அவர்களை அன்னாரை சந்தித்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறினார்கள்: உங்களது ஐம்பது ஆயிரம் திர்ஹம் என்னிடம் இருந்தது. நான் அதை உங்களிடம் பெற்றிருந்தேன். அதை என்னிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் ஒரு நபரை அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். அதாவது ஏதோ ஒரு சமயத்தில் அவர்கள் பெற்றிருந்தார்கள். அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. எனவே அதை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். எனவே ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கூறினார்கள்: உங்களது வள்ளல் தன்மையின் காரணமாக நான் அதனை உங்களுக்கு அன்பளிப்பாக வழங்கி விட்டேன் என்று கூறினார்கள்.

(அல்பதாயா வந்நஹாயா லாபின் அஸீர் தொகுதி 4 பக்கம் 208 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் ஷஹாதத் ஜமல் போரின்போது நிகழ்ந்தது. இது தொடர்பாக இந்த அறிவிப்பு வந்துள்ளது. கைஸ்

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இணை வைத்திருக்க மாட்டார்கள். நாம் உம்மை அவர்களைக் காப்பாற்றுபவராக நியமிக்கவில்லை. நீர் அவர்களுக்குப் பாதுகாவலருமில்லை. (6:108)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

பின் அபூ ஹாஸிம் அறிவிக்கின்றார்கள்: மர்வான் பின் ஹகம் என்பவன் ஒட்டகப் போரின் போது ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் முட்டுப் பகுதியில் அம்பை எய்தான். எனவே அவர்களின் நரம்பிலிருந்து இரத்தம் வெளியேறியது. அதை அவர்கள் கையால் பிடித்தபோது இரத்தம் நின்று விடும். ஆனால் விட்டுவிடும்போது இரத்தம் வெளியேறி வந்தது.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! தற்போது வரை நம்மிடம் அந்த மக்களின் அம்பு வரவில்லை. மேலும் கூறினார்கள்: காயத்தை விட்டு விடுங்கள். ஏனென்றால் இது உனது அல்லாஹ் இதனை அனுப்பியுள்ளான்.

ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்கள் ஒட்டகப் போரில் அதாவது **10** ஜமாஅதிஸ் சானியில் ஹிஜ்ரி **36** ஆம் ஆண்டு ஷஹீதாக்கப்பட்டார்கள். ஷஹாதத்தின்போது அன்னாரது வயது **64** ஆகும். இன்னொரு அறிவிப்பிற்கேற்ப **62** வயது என்றும் வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி **3** பக்கம் **167,168** தல்ஹா பின் உபைதுல்லாஹ் – **1990** ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சயீது பின் முஸய்யப் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர், ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சுபைர் ஆகியோரின் தீமைகளை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் அவர்களைத் தடுத்தார்கள். மேலும் எனது சகோதரர்களைப் பற்றி தவறாக கூறாதீர்கள் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் சஅத் அவர்கள் எழுந்து இரண்டு ரக்அத்துகளை தொழுதார்கள். மேலும், அல்லாஹ்வே! இவர்கள் கூறுகின்ற விஷயம் உனது கோபத்திற்கு ஆளாக்கக்கூடியது என்றால் பிறகு எனது கண்களுக்கு முன்னாலேயே ஏதாவதொரு தண்டனையை இறக்குவாயாக. மேலும் அது இந்த மக்களுக்கு படிப்பினையாக இருக்க வேண்டும் என்று துஆ செய்தார்கள். அந்த நபர் அங்கிருந்து சென்றார். அப்போது ஒரு ஒட்டகம் வேகமாக வந்தது. அந்த ஒட்டகம் அந்த நபரை தன்து நெஞ்சுப் பகுதி மற்றும் தரைக்கு நடுவே வைத்தது. மேலும் அவனை கொன்று விட்டது.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் சஅத் அவர்களுக்குப் பின்னால் மக்கள் இவ்வாறு கூறி சென்று கொண்டிருந்தனர். அதாவது அபூ இஸ்ஹாக்கே! உங்களுக்கு வாழ்த்துக்கள். உங்களது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி **3** பக்கம் **88** தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அலி பின் ஸைது தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்: ஒரு நபர் ஹஸ்ரத் தல்ஹா அவர்களை கனவில் கண்டார். கனவில் ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது எனது கபரை இன்னொரு இடத்திற்கு மாற்றி விடுங்கள். எனக்கு தண்ணீர் மிகவும் துன்பத்தை தருகின்றது. இதேபோன்று அந்த நபர் மீண்டும் ஹஸ்ரத் தல்ஹா அவர்களை கனவில் பார்க்கின்றார். இவ்வாறு தொடர்ச்சியாக மூன்று முறை பார்த்தபிறகு அந்த நபர் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களிடம் வந்து இந்த கனவைப் பற்றி எடுத்துரைத்தார். மக்கள் அங்கு சென்று அவர்களைப் பார்த்தபோது தரையுடன் இணைந்திருந்த அவர்களது உடலின் பகுதி தண்ணீரினால் நிரம்பியிருந்தது. எனவே மக்கள் ஹஸ்ரத் தல்ஹா அவர்களை அந்த கபரிலிருந்து வெளியேற்றி இன்னொரு இடத்தில் அடக்கம் செய்து விட்டார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: நான் இப்போதும் அவர்களின் கண்களில் போடப்பட்டிருந்த கற்பூரத்தை பார்க்கின்றேன். அதில் எவ்வித மாற்றமும் இல்லாமல் இருந்தது. அவர்களின் முடியில் மட்டும் சிறிது மாற்றம் இருந்தது. மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் ஒரு வீட்டை பத்து ஆயிரம் திர்ஹமிற்கு வாங்கி அதில் ஹஸ்ரத் தல்ஹா அவர்களை நல்லடக்கம் செய்தனர்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி **3** பக்கம் **88** தல்ஹா பின் உபைதுல்லாஹ் குரைஷி – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களுக்க ஈராக் நிலப்பகுதியில் **4,5** லட்சம் தீனார் மதிப்புள்ள விளைச்சல் இருந்தது. மேலும் சிரா என்ற இடத்திலிருந்து அன்னாருக்கு குறைந்தது பத்து ஆயிரம் தீனார் மதிப்புமிக்க விளைச்சலும் கிடைத்து வந்தது. மற்ற நிலங்களிலிருந்தும் விளைச்சல் இருந்தது. பனூ தைம் கோத்திரத்தைச் சார்ந்தவர்களில், தேவையுடைய எவருக்கும் அன்னார் உதவி செய்யாமல் இருந்ததில்லை.

அதேபோன்று அவர்களது விதவைகளுக்கு திருமணம் செய்து வைக்காமல் அன்னார் இருந்ததில்லை. அவர்களில் கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவி செய்யாமல் இருந்தில்லை. அவர்களின் கடனாளிகளுக்கு கடன் கொடுக்காமல் இருந்ததில்லை. அனைவரது கடனையும் அன்னார் அடைத்து வந்தார்கள். அதுமட்டுமின்றி ஒவ்வொரு வருடமும் விளைச்சலிலிருந்து கிடைத்து வந்த வருமானத்தில் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களுக்கு பத்து ஆயிரம் திர்ஹம் அனுப்பி வந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி **3** பக்கம் **166** தல்ஹா பின் உபைதுல்லாஹ் – **1990** ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஆவிய்யா அவர்கள் மூஸா பின் தல்ஹா அவர்களிடம் கேட்டார்கள். அதாவது அபூ முஹம்மது அதாவது தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்கள் எவ்வளவு தொகையை விட்டுச் சென்றுள்ளார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், **22** லட்சம் திர்ஹமையும், **2** லட்சம் தீனாரையும் விட்டுச் சென்றுள்ளார்கள். இவர்களது அனைத்து செல்வமும் விளைச்சலிலிருந்துதான் கிடைத்து வந்தது. பல்வேறு நிலத்திலிருந்து அவர்களுக்கு வருமானம் வந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி **3** பக்கம் **166** தல்ஹா பின் உபைதுல்லாஹ் – **1990** ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நான் கூறியது போன்று இவர்களது ஷஹாதத் ஜமல் அதாவது ஒட்டகப் போரில் நிகழ்ந்தது. இதனைப் பற்றிய விளக்கம் இன்ஷா அல்லாஹ் அடுத்து எடுத்துக் கூறப்படும். ஏனென்றால் அதன் விளக்கமும் தனியாக எடுத்துக் கூறப்பட வேண்டியவையாக உள்ளது. ஏனென்றால் நமது சிந்தனைகளில் எழுகின்ற சில கேள்விகளுக்கு அதில் பதில் கிடைத்து விடும். இன்ஷா அல்லாஹ். இது தொடர்பாக அடுத்து எடுத்துரைக்கப்படும்.

இன்றைய நாட்களில் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொடர்பாக கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தேன். இதற்காக தற்காப்பு நடவடிக்கையை செய்து கொண்டே இருங்கள். பள்ளிவாசலுக்கு செல்லும்போது பேணுதலுடன் வாருங்கள். காய்ச்சல், உடல் வலி போன்றவை இருக்குமென்றால் அத்தகைய இடங்களுக்கு செல்ல வேண்டாம். பொது இடங்களுக்கு செல்வதிலிருந்து தானும் தவிர்ந்திருங்கள். மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருங்கள். மேலும் துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் உலகத்தை தண்டனையிலிருந்து காப்பாற்றுவானாக.

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

வளரும். மேலும் இவ்வாறு அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின் காரணமாக வீட்டில் அமர்ந்திருப்பதும் மார்க்கம் மற்றும் ஆன்மீகத்தின் பயன்களுக்கு காரணிகளாக அமைந்து விடும். அறிவார்ந்த நன்மைகளுக்கும் காரணியாக அமைந்து விடும். இன்னும் சொல்வதென்றால், அல் ஹகம் பத்திரிகையில் இன்றைய நாட்களில் மக்களின் கருத்துக்களை கேட்கின்ற தொடரை ஆரம்பித்துள்ளார்கள். அதில் இந்த கட்டுப்பாடுகளின் காரணமாக வீட்டில் அமர்ந்து நேரத்தை எவ்வாறு கழித்தீர்கள்? என்று கேட்கப்படுகிறது.

அதில் பெரும்பாலான மக்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்கள் மற்றும் ஜமாஅத் புத்தகங்களைப் படித்து நாங்கள் எங்களது அறிவை வளர்த்து வருகின்றோம் என்று கூறுகின்றனர்.

இன்றைய நாட்களில் உலகில் பல்வேறு தரப்பட்ட இணைய தளத்தில் தத்தமது கருத்துக்களை உலகியல்வாதிகள் கூறி வருகின்றனர். அவர்கள் கூறுவது என்னவென்றால், இந்த கட்டுப்பாடுகளின் காரணமாக எங்களது குடும்ப வாழ்க்கையின் நிலைமைகளை சரி செய்வதற்கு எங்களுக்கு பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் எங்களது குடும்ப வாழ்க்கை எங்களுக்கு திரும்ப கிடைத்து விட்டது என்றும் கூறுகின்றனர்.

எனவே நாமும் நமது குடும்ப வாழ்க்கையின் நிலைமைகளை சீர் செய்தவாறு, குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்கியவாறு இந்த நேரத்தை கழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். MTA வில் மிக நல்ல நிகழ்ச்சிகள் வருகின்றன. அதற்கென்று சில நேரத்தை ஒதுக்கி அந்த நிகழ்ச்சிகளை ஒன்றுசேர்ந்து பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் அரசாங்கம் பொது மக்களின் நன்மைக்காக நான் ஏற்கெனவே கூறி இருக்கின்றேன். உங்களது ஆரோக்கியத்தை நிலைநாட்டுவதற்காக என்ன வழிகாட்டல்களை வழங்கியுள்ளதோ மேலும் என்னென்ன சட்டங்களை விதித்துள்ளதோ அதனை முழுமையாக நீங்கள் பின்பற்றுங்கள்.

எல்லாவற்றையும் விட அதிகமாக நான் கடந்த குத்பாக்களில் ஏற்கனவே கூறியிருப்பது போன்று, துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். துஆக்களின் மூலமாக அல்லாஹ்வின் அருள்களை நம்மால் ஈர்க்க முடியும். மேலும் நமது ஆன்மீக மற்றும் பௌதீக நிலைகளை ஆரோக்கியமானதாக ஆக்கிக் கொள்ள முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அவ்வாறு செய்யும்படியே நமக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

எல்லாவற்றையும் விட மிக அவசியமான விஷயம் என்னவென்றால், இறைவனிடத்தில் பாவமன்னிப்பு வேண்டுவதாகும். மேலும் உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும். மேலும் நற்செயல்களில் மும்முரமாகி விட வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தற்போதைய சூழலுக்குரிய வழிமுறையாக நமக்கு வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் துஆ என்னும் மாபெரும் ஆயுதத்தை நமக்கு வழங்கியுள்ளான். அதன் மூலம் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஜுமுஆ தொழாமல் இருப்பது தொடர்பான கேள்வியைப் பொறுத்தவரை, சில சூழல்களில் ஜமாஅத்தான தொழுகை மற்றும் ஜுமுஆவை நிறைவேற்றுவதிலிருந்து விலக்கு தொடர்பாக சில நபிமொழிகளில் நமக்கு விளக்கம் உள்ளது. உதாரணமாக, புகாரியில் வருகின்ற ஒரு ஹதீஸ் இவ்வாறு உள்ளது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள், மழை நாளில் தனது பாங்கு கொடுக்கின்ற நபரிடம் கூறினார்கள்: நீங்கள் அஷ்ஹது அல்லாயிலாஹா இல்லல்லாஹ் மற்றும் அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறிய பிறகு ஹய்யா அலஸ் ஸலாத் என்று கூற வேண்டாம். மாறாக, சல்லூ ஃபீ புயூதிகும் அதாவது உங்களது வீடுகளிலேயே தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்ற சொற்களை கூற வேண்டும் என்று கூறினார்கள். ஆக ஒரு வகையில் மக்களுக்கு இது ஆச்சரியமானதாக இருந்தது. மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்வாறே செய்தார்கள். அன்னார் என்னை விட சிறந்தவராக இருந்தார்கள். ஜுமுஆ தொழுவது அவசியம்தான் என்றாலும் நீங்கள் சகதியில் நடந்து வந்து துன்பத்திற்கு ஆளாகுவதை நான் விரும்பவில்லை.

இந்த ஹதீஸ் முஸ்லிமிலும் சொற்களில் சில மாற்றங்களுடன் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நீங்கள் அஷ்ஹது அல்லாயிலாஹா இல்லல்லாஹ் மற்றும் அஷ்ஹது அன்ன முஹம்மத்துர் ரஸூலுல்லாஹ் என்று கூறிய பிறகு ஹய்யா அலஸ் ஸலாத் என்று கூற வேண்டாம். மாறாக, சல்லூ ஃபீ புயூதிகும் அதாவது உங்களது வீடுகளிலேயே தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்று பாங்கு கூறக் கூடியவரிடம் கூறினார்கள். மக்களுக்கு அது புதிதாக இருந்தது.

அப்போது ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள், நீங்கள் ஏன் ஆச்சரியப்படுகின்றீர்கள்? என்னை விட சிறந்தவராக இருந்த நபரே இந்த பணியை செய்திருந்தார்கள். ஜுமுஆ தொழுவது அவசியம் என்றாலும் உங்களை இந்த நிலையில் வீட்டை விட்டு வெளியேறுவதையும், நீங்கள் சகதியில் நடப்பதையும் நான் விரும்பவில்லை என்றும் அன்னார் கூறினார்கள்.

அல்லாமா இமாம் நவ்தி சாஹிப் இந்த ஹதீஸின் விளக்கவுரையாக எழுதுகின்றார்கள்: அதாவது இந்த ஹதீஸின் அடிப்படையில் மழை போன்ற நிர்பந்தத்தின் காரணமாக ஜுமுஆவை கைவிடுவதற்கு ஆதாரம் உள்ளது. நமது வழிமுறையும் இதுவாகவே உள்ளது.

அவர்கள் எழுதுகின்றார்கள்: மற்ற மார்க்க சட்ட வல்லுநர்களின் கருத்தும் இதுதான். ஆனால் இமாம் மாலிக் அவர்கள் இதற்கு நேர் எதிரான கருத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். வல்லாஹு அஃலமு பிஸ்ஸவாப்.

இதேபோன்று மார்க்க சட்ட அறிஞர்கள் ஜுமுஆ மற்றும் ஜமாஅத்தாக தொழுவதிலிருந்து விலகி இருப்பதற்குரிய காரணங்களில் எந்த நோயினால் பள்ளிவாசலுக்கு வருவது கடினமோ அதனையும் ஒரு காரணமாக இணைத்துள்ளார்கள். அதற்கு ஆதாரமாக அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலை அவர்கள் முன் வைக்கின்றார்கள். அதாவது அல்லாஹ் மார்க்கத்தில்

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

உங்களுக்கு எந்த கடினத்தையும் ஏற்படுத்தவில்லை என்று கூறியுள்ள வழிகாட்டலை முன் வைக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது அன்னார் பள்ளிவாசலுக்கு செல்வதிலிருந்து விலகிக் கொண்டார்கள். மேலும் மக்களுக்கு இமாமத் செய்யுமாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

இந்த ஹதீஸ் புகாரியிலும் உள்ளது. முஸ்லிமிலும் உள்ளது.

அதேபோன்று ஒரு நோய் ஏற்படும் என்று அச்சப்படும் நபரும் விலக்கு பெற்றவர் ஆவார். அதற்குரிய ஆதாரம் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களுடைய அறிவிப்பாகும். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விலகி இருப்பதன் தஃப்ஸீராக அச்சம் மற்றும் நோயை குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஹதீஸ் சுனன் அபீ தாவூதில் உள்ளது.

எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள இந்த நோயில் நோய் பரவுவதற்கான அபாயம் உள்ளது. எனவே அரசாங்கமும் அதற்காக சில சட்டங்களை உருவாக்கி உள்ளது. நாட்டின் சட்டங்களுக்கேற்ப நடப்பதும் அவசியமாகும். இதுபோன்ற நிலைகளில் ஓரிடத்தில் ஒன்று கூடுவதும், ஜமாஅத்தாக தொழுவதும் அல்லது ஜுமுஆ தொழுவதும் கடினமாகும். ஆனால் நான் கூறியதுபோன்று வீட்டில் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கத்தை உருவாக்குங்கள். அதன் மூலம், தொழுகைகளை தொழுவதும் அவசியமாகும். ஜமாஅத்தாக தொழுவதும் அவசியமாகும் என்ற அறிவு பிள்ளைகளுக்கு ஏற்படும்.

இன்றைய நாட்களின் சூழலின் காரணமாக நம்மால் பள்ளிவாசலுக்கு செல்ல முடியாது. ஆனால் அந்த கடமையை நமது வீட்டில் நிறைவேற்றுவதும் அதை முழுமை செய்வதும் அவசியமாகும். அதன் பக்கம் சிறப்பான கவனம் செலுத்துங்கள். சில முறை இதுபோன்ற சூழல்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் பயணங்களின்போது வந்துள்ளன. அந்நிலைகளில் அன்னார் ஜுமுஆ தொழுததில்லை.

எவ்வாறிருப்பினும் ஏராளமான அறிவிப்புகள் உள்ளன. அதிலிருந்து தொற்று நோய்களின்போது ஒன்று கூடுவதும், அல்லது நோய்வாய்ப்பட்ட நிலைகளில் ஒருவர் மற்றவரை சந்திப்பதும் உகந்ததல்ல என்பது தெரிய வருகின்றது. எனவே அந்நிலைகளில் தனியாக இருக்க வேண்டும். மேலும் தனியாக வைக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியதுபோன்று நாம் நிரந்தரமாக இதை கைவிடப் போவதில்லை. மேலும் அதற்கான மாற்று ஏற்பாட்டையும் நாம் செய்து கொண்டிருக்கின்றோம். வீடுகளில் ஜுமுஆ தொழுது கொள்ளுங்கள். நானும் ஓர் ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சி செய்வேன்.

அல்லாஹ் அருள் செய்வதற்காக துஆ செய்யுங்கள். இப்போது இது அவசியமாகும். நான் ஏற்கெனவே கூறியதுபோன்று அல்லாஹ் இந்த தொற்று நோயிலிருந்து உலகை விரைவில் தூய்மைப்படுத்துவானாக. மேலும் முழு உலகையும் மனிதத்துவத்தின் தேட்டத்தை முழுமை செய்யக் கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் அனைவரையும் இறைவனை அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ

### முக்கிய அறிவிப்பு
### ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது: வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக.

(முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. மேலும் ஆசியாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்தவொரு செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். மேலும் குடியிருப்புகள் நாசமாகி விட்டதைக் காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை மவுனமாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னால் வெறுக்கத்தக்க செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் அச்சுறுத்தலுடன் தனது முகத்தைக் காட்டுவான். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை கேட்கக்கூடிய காதுகள் கேட்டுக் கொள்ளட்டும்.

இறைவனின் பாதுகாப்பின் கீழ் அனைவரையும் கொண்டு வர வேண்டும் என நான் முயற்சி செய்தேன். ஆனால் இறை நியதியில் எழுதப்பட்டது நிறைவேறுவது அவசியமானதாக இருந்தது. இந்த (இந்திய) நாட்டிற்கான முறையும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என நான் உண்மையாகவே கூறுகிறேன். நூஹின் காலம் உங்கள் கண்களுக்கு முன்னால் வந்து விடும். மேலும் லூத்தின் நாட்டில் நடந்த சம்பவத்தை உங்கள் கண்களாலேயே கண்டு கொள்வீர்கள். ஆனால், இறைவன் கோபத்தை காட்டுவதில் நிதானமானவனாக இருக்கிறான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் பாவமன்னிப்புத் தேடுங்கள். எவர் இறைவனை விட்டு விடுன்றாரோ அவர் ஒரு கிருமியாவார்; மனிதர் அல்ல. யார் அவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவராவார்; உயிருடன் இருப்பவர் அல்ல.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 265)

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். இல்லையாயின், அவர்கள் அறியாமையினால் அல்லாஹ்வை ஏசுவார்கள். இவ்வாறு நாம் ஒவ்வொரு சமுதாயத்தினர்க்கும் அவர்களின் செயலை அழகுவாய்ந்ததாகக் காட்டியுள்ளோம். பின்னர் அவர்கள் தங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்ல வேண்டியவராய் உள்ளனர். (6:109)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 16 April 2020 Issue No. 16

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**இன்றைய நாட்களில் பரவியுள்ள தொற்று நோயின் காரணமாக ஜமாஅத் உறுப்பினர்கள், வீடுகளிலேயே ஜமாஅத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ளவும். மேலும் ஜுமுஆவும் வீட்டிலுள்ளவர்கள் இணைந்து தொழவும். துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். துஆக்களின் மூலமாக அல்லாஹ்வின் அருள்களை நம்மால் ஈர்க்க முடியும். இறைவனிடத்தில் பாவமன்னிப்பு வேண்டுங்கள். மேலும் உள்ளத்தை தூய்மையாக்குங்கள்.. மேலும் நற்செயல்களில் மும்முரமாகி விடுங்கள். அல்லாஹ் அருள் செய்வதற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த தொற்று நோயிலிருந்து உலகை விரைவில் தூய்மைப்படுத்துவானாக. மேலும் முழு உலகையும் மனிதத்துவத்தின் தேட்டத்தை முழுமை செய்யக் கூடியவர்களாக ஆக்குவானாக**

செய்யிதுனா அமீருல் மு:ஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள இஸ்லாமாபாதில் 27 மார்ச் 2020** அன்று நிகழ்த்திய சிறப்பு சொற்பொழிவு

இன்றைய நாட்களில் வைரஸ் தொற்று நோய் பரவியிருப்பதன் காரணமாக அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. ஏராளமான அரசாங்கங்களும், இங்குள்ள பிரித்தானிய அரசாங்கமும், பள்ளிவாசலில் தொழுகை நடத்தக் கூடாது என்று கூறியுள்ளன. அல்லது ஒருவேளை, தொழுகை நடைபெற்றாலும் சில உறுப்பினர்களைத் தவிர்த்து அதிகமானோர் ஒன்றுகூடக்கூடாது என்று மேலும் அவர்கள் நெருங்கிய மக்களாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளன. இன்னும் சட்டம் நமக்கு தெளிவாக தெரியவில்லை. ஒருவர் ஒரு விளக்கம் தருகின்றார்; வேறொருவர் மற்றொரு விளக்கம் தருகின்றார்.

சிலர் கூறுவது என்னவென்றால், உறவினர்களாக இருந்தால்தான் ஒன்றுகூட முடியும் என்று கூறுகின்றார். வேறொருவரோ நண்பர்கள் அல்லது உடன் இருப்பவர்கள் கலந்து கொள்ள முடியும் என்று கூறுகின்றார். எவ்வாறிருப்பினும் இந்த சூழல்கள் முறையாக தெளிவு பெறாத வரை ஜுமுஆ நடத்த முடியாது. ஏனென்றால் ஜுமுஆ தொடர்பான விஷயங்களில் சில விளக்கம் பெற வேண்டிய விஷயங்கள் உள்ளன.

எனவே அலுவலகத்திலிருந்து இருந்து கொண்டு குத்பாவிற்கு பகரமாக ஒரு தூதுச் செய்தியின் வடிவில் உங்களுடன் பேச வேண்டும் மற்றும் உரையாட வேண்டும் என்று நான் ஆலோசனைக்குப் பிறகு இந்த முடிவை எடுத்துள்ளேன்.

ஜுமுஆ முறையாக தொழப்பட வேண்டாம் என்றும் முடிவெடுத்துள்ளேன்.

ஜுமுஆ நாளன்று காலத்தின் கலீஃபாவின் குத்பாவை MTA வில் கேட்பதற்கு உங்கள் அனைவருக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. இன்று நான் ஜமாஅத்திடம் பேசவில்லை என்றால் மக்களுக்கு சில சமயம் நிராசை ஏற்பட்டு விடும். மேலும் அதுமட்டுமல்லாமல் பல தரப்பட்ட கற்பனைகளும் ஆரம்பமாகி விடும். எனவே ஏதாவதொரு வடிவில் ஜமாஅத்துடன் உரையாடுவதை நான் உகந்ததாக கருதினேன். மேலும் அதற்காக அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு ஒரு தூதுச் செய்தியின் வடிவில் உங்களுடன் பேசுகின்ற வழிமுறையை நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

எவ்வாறிருப்பினும் நாம் கூறியதுபோன்று இன்று நாம் ஜுமுஆ தொழ மாட்டோம். எதிர்வரும் நாட்களில் என்ன வழிமுறை மேற்கொள்ளப்படும் என்பது உங்களுக்கு கூறப்படும். இன்ஷா அல்லாஹ். நீண்ட காலம் நம்மால் ஜுமுஆவை கைவிடவும் முடியாது. நான் கூறியதுபோன்று ஜமாஅத்துடன் எனது தொடர்பு அவசியமாகும். இன்றைய நாட்களில் நிலவும் சூழல்களில் குறிப்பாக அது மிகவும் அவசியமாகி விட்டது. எனவே வக்கீல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மக்களுடன் ஆலோசனை செய்த பிறகு இன்ஷா அல்லாஹ் அதற்குரிய தீர்வை நாம் காண்போம்.

ஜமாஅத் உறுப்பினர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், எங்கு அரசாங்கம் இந்த நோயின் காரணமாக பள்ளிவாசலுக்கு வருவதற்கு தடை செய்துள்ளதோ அங்கு அதை பின்பற்ற வேண்டும். அல்லது ஒருவேளை தடை செய்யவில்லை என்றாலும் உதாரணமாக, இங்கு யூ.கேவில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதாவது தனிப்பட்ட முறையில் பள்ளிவாசலுக்கு வந்து தொழுது கொள்ளலாம். அல்லது சில குடும்ப உறுப்பினர்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுது கொள்ளலாம். ஆயினும் இவ்வளவு தூரத்திலிருந்து வர வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. மேலும் தங்களுக்குள் நெருங்கிய தொடர்பு இருக்கக்கூடாது என்றும் அரசாங்கம் கூறியுள்ளது. ஆனால் அனைவரும் ஒன்றுகூடி ஜமாஅத்தான தொழுகையை நடத்த முடியாது.

எனவே இதுபோன்ற நிலைகளில் ஜமாஅத் உறுப்பினர்கள் தத்தமது வீடுகளிலேயே ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் இணைந்து ஜுமுஆ தொழுது கொள்ள வேண்டும். மல்ஃபூஸாத்திலிருந்தோ அல்லது ஜமாஅத் புத்தகங்களிலிருந்தோ அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இதர நூல்களிலிருந்தோ அல்லது அல்ஃபஸல் பத்திரிகையிலிருந்தோ அல்லது அல் ஹகம் பத்திரிகையிலிருந்தோ அல்லது வேறு ஏதாவதொரு பத்திரிகையிலிருந்தோ மேற்கோள்களை படித்து குத்பா கொடுத்துக் கொள்ளலாம். வீட்டின் உறுப்பினர்களில் பருவமடைந்த இளைஞரோ அல்லது ஆணோ ஜுமுஆ நடத்தலாம். தொழுகைகளையும் நடத்தலாம்.

எவ்வாறிருப்பினும் ஜுமுஆவை நீண்ட காலம் கைவிட முடியாது. வீடுகளில் மக்கள் ஜுமுஆக்களை நடத்துகின்றபோது அவர்கள் குத்பாவிற்காக ஆயத்தம் செய்வார்கள். அந்நிலையில் புத்தகங்களை படிப்பார்கள். அதன் மூலம் அவர்களின் அறிவு

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad